முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி
(கொடைக்கானல் முகாம்)
O.S. No. 402/2019

தேதி : 18.10.2024

(வா.சா.1) – திரு.முருகேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பிரதிவாதி குறுக்கு விசாரணை :

பிரதிவாதி குணசேகரன் என் உறவினர் என்றால் இல்லை. ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். பிரதிவாதி குடும்ப விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. விவசாயத்தின் மூலம் கிடைக்கிற வருமானத்தை தவிர வேறு வருமானம் இல்லை என்றால் விவசாயம் மற்றும் கூலி வேலைக்கு செல்வேன். வருடத்திற்கு 2, 3 லட்சம் சம்பாதிப்பேனா என்றால் சம்பாதிப்பேன். நானும் என் மனைவியும் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறோம் என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் நானும் எனது மனைவியும் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் 2 வழக்குகள். 2 வழக்குகளுமே கிரைய ஆவணம் பதிவு செய்யக்கோரி தாக்கல் செய்த வழக்குகள் என்றால் ஆமாம். பிரதிவாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் வாரிசுகளையும் அழைத்து வந்து கிரையம் எழுதிக்கொடுப்பதாக சொல்லப்பட்டது என்றால் ஆமாம். கிரையபத்திரம் பதிவு செய்யும்பொழுது இருக்கிற வாரிசை அழைத்து வந்து கிரைய பத்திரம் பதிவு செய்ய அழைத்து வருவதாக சொன்னார் ஆனால் அவருக்கு எத்தனை வாரிசு என்று தெரியாது. நான் விசாரிக்கவில்லை,. வழக்கு சொத்து பிரதிவாதியின் பூர்வீக சொத்தா என்றால் இல்லை. சுயமாக சம்பாதித்தது. பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் பிரதிவாதி வாரிசுகளுடன் வந்து பகிர்ந்த கொடுப்பதாக சொல்லியிக்கிறேன் என்றால் ஆமாம். ஆனால் அறிவிப்பு வாரிசுகளுக்கு அனுப்பவில்லை என்றால் ஆமாம்.

கிரைய ஒப்பந்தத்தில் யாரெல்லாம் கையெழுத்திட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் ஆமாம். முருகானந்தம், கேசவமணி சாட்சி கையெழுத்திட்டார்கள். வழக்கு சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் பத்திரத்தில் சொல்லப்பட்டது தற்பொழுது சொல்லமுடியாது. பிரதிவாதி என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. சொத்தின் சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது..

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/.K.Renugadevi
Principal Sub Judge,
Palani.